(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(7).]

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 ஜூலை 25, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 ஆகஸ்ட் 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

சபாநாயகர்,— 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் திரு. ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோன் அவர்களை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானம்,— 2025.04.08 திகதிய ஒழுங்குப் பத்திரத்தில் காணப்பட்ட பா. 29/2025 ஆம் இலக்கத் தீர்மானம், 2025 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, குறிப்பிட்ட அத்தீர்மானத்தில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரித்து, விசாரணையில் இருந்து கண்டறிந்தவைகளை அறிக்கையிடுவதற்காக, 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5(2) மற்றும் 6(ஆ) பிரிவுகளின் கீழ் ஒரு விசாரணைக்குழு (இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமிக்கப்பட்டமையினாலும்;

மேற்படி சட்டத்தின் 8(1)(ஆ) பிரிவின் பிரகாரம், குழு அதன் முடிவெடுப்புக்களை மேற்கொண்டு, அத்தகைய முடிவெடுப்புக்களை 2025.07.21 ஆம் திகதியன்று சபாநாயகருக்கு அறிவித்தமையினாலும்;

குழுவின் முடிவெடுப்புக்கள் அடங்கிய அறிக்கை 2025.07.22 ஆம் திகதியன்று சபாநாயகரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டமையினாலும்;

குழு அதன் விசாரணையை மேற்கொண்டு, மேற்படி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மொத்தம் 23 குற்றச்சாட்டுகளில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 13, 14, 15, 16, 17, 18, 19, 22, மற்றும் 23 ஆம் இலக்கக் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியெனக் கண்டறிந்துள்ளமையினாலும்;

விசாரணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட குற்ற முடிவெடுப்புக்கள் மற்றும் இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41(இ)(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி திரு. ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— பொதுத் தனிசு ஒருங்கிணைத்தற் குழுவின் விதப்புரையின் மீது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 44(3) மற்றும் 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 19, 20, 21, 22 மற்றும் 23 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 35 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2025 யூன் 30 ஆம் திகதிய 2443/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 யூன் 18 ஆம் திகதிய 2441/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரச பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 41 ஆவது பிரிவின் கீழ் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 மே 21 ஆம் திகதிய 2437/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 (1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 யூன் 13 ஆம் திகதிய 2440/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# 2025 ஆகஸ்ட் 19, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

16/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கையின் தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலை ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஆகியன ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தேயிலை ஏற்றுமதியைக் கருத்தில் கொள்கையில் மேற்படி காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் இலங்கை வகித்த இடம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கையின் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

116/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான சம்பவம் சமூகத்தில் பெரும் பேசுபொருளாக இருந்தமையை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்விடயம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் மூலம் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட பிணைமுறி மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

185/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட துறைநீலாவணை தொடக்கம் குருக்கள்மடம் வரையான பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டியதும் புனரமைக்கப்பட வேண்டியதுமான வடிகாண் தொகுதிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

218/2024

கௌரவ ரோஹன பண்டார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான M-class வகையைச் சேர்ந்த புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எஞ்சின்களின் மொத்தப் பெறுமதி யாது என்பதையும்;

(iii) அந்த எஞ்சின்களில், இன்றளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையிலிருந்து அகற்றப்பட்டுள்ள எஞ்சின்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ள M-class வகை புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அவற்றை விரைவில் பழுதுபார்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

623/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது பெற்றோலிய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனங்கள் / கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) கடந்த அரசாங்கம் மேற்படி நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கைகள் காரணமாக எரிபொருள் விலையைக் குறைக்க முடியாதெனவும், எரிபொருள் விலையைக் குறைத்தால் சம்பந்தப்பட்ட கம்பனி களுக்கு இழப்பீடு செலுத்த நேரிடும் எனவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அந்தக் கூற்றின் உண்மைத்தன்மை/பொய்த்தன்மை குறித்து அறிவிப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளை திருத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1075/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையினால் மாற்று வேலைத்திட்டம் எதுவுமின்றி 2025 ஆம் ஆண்டில் நிகழ்நிலை ஆசன முன்பதிவு வசதிகளைக் கொண்ட எத்தனை பேரூந்துச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன என்பதையும்;

(ii) அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட பயணத் தடவைகளுக்காக அறவிடப்பட்ட, ஆயினும் இதுவரையில் மீளச் செலுத்தப்படாத மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே தெரிவிக்கப்பட்ட பயணத் தடவைகள் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அது தொடர்பில் பயணிகளுக்கு முன்கூட்டியே அறிவிப்பதற்கும் அதற்குரியதான பணத்தை தாமதமின்றி மீளச் செலுத்துவதற்கும் ஏதேனும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) பயணிகளின் நன்மை கருதி வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக இந்நடவடிக்கை இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்நிலை வழியிலான ஆசன ஒதுக்கீட்டுக் கொள்கையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1081/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள, மாலபே, கடுவெல வீதி, இலக்கம் 362 டீ எனும் முகவரியில் தமது தலைமை வர்த்தக நிலையத்தை கொண்டு நடாத்தும், Park Properties (Private) Limited எனும் நிறுவனம் நீண்ட காலமாக ஈடுபட்டு வரும் நிதி மோசடிகள் தொடர்பில் மேல் மாகாண பொலிஸ் நிலையத்துக்கு இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்குறிப்பிட்ட நிறுவனம் தொடர்பில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாது;

(iii) மேற்குறிப்பிட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1083/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கருங்கல் உடைத்தல் மற்றும் மண் அகழ்வு நடவடிக்கைகளுக்கு மாகாண சபை நிருவாகத்தின் கீழுள்ள எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் அனுமதி பெறாமல் நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்தே அனுமதி பெறப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படிச் செயற்பாட்டின்போது தொல்பொருளியல் திணைக்களம், புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் உரிய பிரதேசச் செயலகம் ஆகிய நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன என்பதையும்;

(iii) அகழ்ந்தெடுக்கப்பட்ட கனிய வளங்களை கொண்டு செல்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தின் கீழுள்ள வீதிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திடமிருந்து அனுமதி பெறப்படுகின்றது என்பதையும்;

(iv) அதன்படி, வட மாகாணத்தின் வளங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியின்றி பிற மாகாணங்களுக்கு கொண்டுச் செல்லப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஆ) (i) வட மாகாணத்தின் வளங்களை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியின்றி பிற மாகாணங்களுக்கு கொண்டுச் செல்வதற்கு இடமளிக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நிலையைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மாற்றுத் திட்டம் யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1091/2025

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அரசாங்க முகாமைத்துவ சேவைக்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டன என்பதை அறிவாரா;

(ii) அத்தகைய ஒவ்வொரு பரீட்சையிலும் சித்தியைத் தீர்மானிக்கும் புள்ளி வெவ்வேறாக யாது;

(iii) 2019 ஆம் ஆண்டு பரீட்சைக்கு ஏற்புடையதாக வெற்றிடங்களை கணிப்பிட அடிப்படையாக கொள்ளப்பட்ட திகதி யாது;

(iv) அதற்கு ஏற்புடைய வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை;

(v) 2019 ஆம் ஆண்டு அரசாங்க முகாமைத்துவ சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சைக்கு ஏற்புடைய ஆட்சேர்ப்புக்கான குறைந்தபட்ச புள்ளி யாது;

(vi) மேற்படி பரீட்சையில் 100 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தற்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனரா;

(vii) இவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாது;

(viii) முதலாவது தடவையின் பின்னர் எஞ்சிய விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முறை யாது;

என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2024 ஆம் ஆண்டின் அரசாங்க முகாமைத்துவ சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சைக்கு ஏற்புடையதாக சித்தியைத் தீர்மானிக்கும் புள்ளி யாது;

(ii) அந்தப் பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை யாது;

(iii) சித்தியெய்திய விண்ணப்பதாரர்களில் இதுரையில் ஆட்சேர்ப்புசெய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) 2019 ஆம் ஆண்டில் 100 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதால், 2024ஆம் ஆண்டுப் பரீட்சையில் 100 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1102/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.01.01ஆந் திகதியளவில் இலங்கையின் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போதைய அரசாங்கம் பட்டதாரிகளுக்கு வழங்கியுள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வேலை வாய்ப்புக்கள் ஒவ்வொரு துறைவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் அரச ஆசிரியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக துரித வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2025 ஆகஸ்ட் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

201/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணினிகளில் இருந்த தரவுகளை அழித்த சம்பவம் அறிக்கையிடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தரவுகளை அழித்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அத்தரவுகளை அழித்ததன் காரணமாக பாரியளவிலான மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

224/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'வளமான நாடு-அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனம் மூலம் ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களை தாபிப்பதற்கு வாக்குறுத்தியளிக்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்கமைய, தற்போது ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள் யாவை;

(iii) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பை ஸ்மார்ட் நீதிமன்றக் கட்டமைப்பாக மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) அதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

262/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது வரை செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

(ii) தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னர் அந்த ஒப்பந்தம் எத்தனை தடவைகள் திருத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அந்தத் திருத்தங்கள் யாவையென்பதையும்;

(iv) புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மேற்படி ஒப்பந்தம் திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறெனில், அந்தத் திருத்தங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி திருத்தங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியது யார் என்பதையும்;

(vii) மேற்படி திருத்தங்களை சர்வதேச நாணய நிதியம் நிபந்தனையின்றி ஏற்றுக்கொண்டுள்ளதா என்பதையும்;

(viii) இன்றேல், சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் திருத்தங்கள் யாவை என்பதையும்;

(ix) அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அல்லது முன்மொழிவுகளில் சர்வதேச நாணய நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் அல்லது முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

312/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எண்ணெய்த் தாங்கிகள் திருகோணமலைத் துறைமுகத்தின் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்திலோ அமைந்துள்ளனவா என்பதையும்;

(ii) திருகோணமலையில் காணப்படும் எண்ணெய்த் தாங்கிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எண்ணெய்த் தாங்கிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இந்த எண்ணெய்த் தாங்கிகள் குத்தகைக்கு விடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இந்த எண்ணெய்த் தாங்கிகளைக் குத்தகைக்கு விட்டமையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானத்தை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் கருத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய முதலீடு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

339/2024

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை, மீதொட்டமுல்ல குப்பை மேடு கருத்திட்டம் காரணமாக, கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பொத்துவில் கும்புர பிரதேசத்தின் குடியிருப்பாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு வெளியேற்றப்பட்ட குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவர்களில் இன்றளவில் வீடுகள் வழங்கப்பட்டுள்ள குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) வீடுகள் வழங்கப்படாத, ஆயினும் இன்றளவிலும் அப்பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

616/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொள்ளுப்பிட்டி, கோல் பேஸ் (Galle Face) டெரஸ் இல், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குச் சொந்தமான ஒரு கட்டிடமும் காணியும் உள்ளதா என்பதையும்;

(ii) அதனை அண்மித்த காணியில் ரேணுகா ஹோல்டிங்ஸ் எனும் நிறுவனத்தினால் புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டதால் ஏற்பட்ட தாக்கம் காரணமாக, இன்றளவில் அந்தக் கட்டிடம் தாழிறங்கி உள்ளது என்பதையும்;

(iii) அது தொடர்பில் ரேணுகா ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு எதிராக அதிகார சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி, அந்த வழக்கினை மத்தியஸ்தத்திற்குக் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட கட்டிடத்தையும் காணியையும் ரேணுகா ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

900/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாகொட, கல்லஸ்ஸ சிறுவர் மற்றும் மகப்பேற்று வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் போதுமானளவு எண்ணிக்கையில் உள்ளனரா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றளவில் அவ்வைத்தியசாலையில் சிறுவர் பிணியாய்வு மற்றும் மகப்பேற்று பிணியாய்வு என்பன நடைபெறுகின்றனவா என்பதையும்;

(iv) அப்பிணியாய்வுகளுக்கு தேவையான ஆய்வுகூட தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி வைத்தியசாலையில் போதியளவு எண்ணிக்கையிலான நோயாளர் காவு வண்டிகள் உள்ளனவா என்பதையும்;

(vi) மேற்படி நோயாளர் காவு வண்டிகளில் சேவையாற்றத் தேவையான சாரதிகள் மற்றும் உதவியாளர்களின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாது என்பதையும்;

(vii) நோயாளர் காவு வண்டிகளில் சேவையில் ஈடுபடத் தேவையான எண்ணிக்கையிலான சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் உள்ளனரா என்பதையும்;

(viii) இன்றேல், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் அரச வைத்தியசாலைகளில் போதியளவு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வசதிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி வசதிகளை பயன்படுத்தக் கூடிய நிலை காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாகவுள்ள மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் யாவை என்பதையும்;

(iv) எப்பிரிவுகளுக்கு அம்மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

958/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின், பல்லகந்தல் தேவாலயத்தில் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வன சீவராசிகள் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இடையூறு செய்வதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1101/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்திலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வசமுள்ள காணிகள் கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்காணிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபர்/நிறுவனம் மற்றும் காணிகள் வழங்கப்பட்டுள்ள கைத்தொழில்கள் தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழில்களில் இன்றளவில் செயற்படும் நிலையிலுள்ள கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போது செயலற்ற நிலையிலுள்ள கைத்தொழில்கள் காணப்படுமாயின், அவை யாவை என்பதையும்;

(v) தற்போது செயலற்ற நிலையிலுள்ள கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1120/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை விருத்தி செய்வதற்காக 1999 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) அத்தகைய நிரந்தரமாக்கலுக்கான அறிவுறுத்தல்களை/சுற்றறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iv) அதன்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாது என்பதையும்;

(v) அத்தகைய அறிவுறுத்தல் கடிதத்தின்/சுற்றறிக்கையின் பிரதியைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) மத்திய அரசாங்கத்தின் ஒவ்வோர் நிரல் அமைச்சு, மாகாண அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் வாரியாகவும் அத்துடன் ஒவ்வொரு பதவிக்குரிய வகுதி வாரியாகவும் மேற்படி பட்டதாரிகளில் நிரந்தரமாக்கப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அத்தகைய பதவி வகுதி ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைய ஆரம்பச் சம்பளம், சம்பள அளவுத் திட்டம் மற்றும் சம்பளக் குறியீட்டு இலக்கம் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) பணி நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி பட்டதாரிகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவை எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(v) அவற்றின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) சேவைப் பிரமாணக் குறிப்பின்படி, பதவி உயர்வு வழங்கும் நடைமுறை யாது என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 ஆகஸ்ட் 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

676/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தினால் மிகச் சிறந்த சேவை வழங்குவதற்கு அத்திணைக்களத்திற்கு தொழில்நுட்ப அலுவலர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) தற்போது இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) தற்போது மேற்படி திணைக்களத்தில் நிலவும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

735/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.02.09 ஆம் திகதி இலங்கையில் மின்சாரம் தடைப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி மின்சாரம் தடைப்பட்ட சம்பவத்தின் பின்னர் மின்விநியோக வலையமைப்பின் நிலைபேறு தன்மையை வலுப்படுத்துவதற்கு இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

808/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை படுகொலை, கடத்தல் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஊடகவியலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டும் பொருட்டு நடத்தப்படுகின்ற விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

832/2025

கௌரவ சட்டத்தரணி (திருமதி) சமிந்திராணி கிரிஎல்லே,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ள பராயமடையாதவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கென இவர்களை அனுப்பி வைக்கின்ற போது பின்பற்றப்பட்டுள்ள நடைமுறை யாது என்பதையும்;

(iii) பராயமடையாதவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பி வைப்பதனைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

859/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) ஹொரொவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவின், 153 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவின் கொடின்னேவ கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணி அனுமதியின்றி துப்புரவு செய்யப்பட்டு அதில் பயிரிடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த காணியை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்கு அதற்காக சட்டப்பூர்வ உரிமை உள்ளதா என்பதையும்;

(v) இவர்கள் உர மானியத்தை பெற்றுக்கொண்டுள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உர மானியத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

868/2025

கௌரவ லால் பிரேமநாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாகனப் புகை உமிழ்வுப் பரிசோதனை வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதன் அடிப்படை நோக்கம் யாதென்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதனூடாக வருடாந்தம் ஈட்டப்படும் வருமானம் ஒவ்வொரு வாகன வகுதியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வருமானத்தை திரட்டும் நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வாகன புகை உமிழ்வுப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனப்படுவது யாதென்பதையும்;

(ii) அது யாரால் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

(iii) அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

877/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' (Deed of Grant) அல்லது 'காணி உரிமம்' (land Permit) இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்ந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

955/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நெடுஞ்சாலைகள் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பாலங்களின் எண்ணிக்கை, புகையிரத வீதிகள் ஊடாக நிர்மாணிக்கப் பட்டுள்ள மேம்பாலங்களின் எண்ணிக்கை மற்றும் நிர்மாணிக்கப்பட்ட சுரங்கப் பாதைகளின் எண்ணிக்கை எத்தனையென்ன்பதையும்;

(ii) அவற்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பாலங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாலங்கள் எவ்விடங்களில் நிர்மாணிப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) வடக்கு புகையிரதப் பாதையில் மஹவ சந்தி ஊடாக மேம்பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி மேம்பாலத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்விழாவுக்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(vi) எதிர்காலத்தில் மேற்படி மேம்பாலத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

971/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) 1925 இல் தாபிக்கப்பட்டு, 1941 இல் கூட்டிணைக்கப்பட்டு, 1949 இல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, யாழ்ப்பாணம், ஸ்ரீ லங்கா ஆயுர்வேத சித்த மருத்துவக் கல்லூரிக்கு தற்போது மாணவர்கள் அனுமதிக்கப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) அதன் தற்போதைய நிலைமை யாது;

(iv) பாரம்பரிய மருத்துவம் பற்றிய எந்தவொரு அறிவும் இல்லாத பல்கலைக்கழக பட்டதாரிகள் ஆயுர்வேத திணைக்களத்திற்கு நியமனம் செய்யப்படுவதற்கான காரணங்கள் யாவை;

(v) அவர்கள் தமது பிரச்சினைகளை புரிந்துகொள்வதில்லை என்று பாரம்பரிய மருத்துவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதை அறிவாரா;

(vi) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(vii) வட மாகாணத்தில் பாரம்பரிய மருத்துவக் கல்வி மற்றும் ஆயுர்வேதக் கல்வியின் முன்னேற்றத்திற்காக சுதேச மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படுமா;

(viii) அதற்காக மேற்கொள்ளும் சட்டரீதியான/நிருவாக ரீதியான நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாரம்பரிய மருத்துவர்களுக்கு அடையாள அட்டை, மருத்துவச் சான்றிதழ் மற்றும் பட்டயம் வழங்குவதற்கான நிறுவனமொன்று தாபிக்கப்படுமா;

(ii) அவர்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை மற்றும் சம்பள அளவுத்திட்டம் அறிமுகம் செய்யப்படுமா;

(iii) அவர்களுக்கு அரசின் உதவி கிடைக்காமைக்கான காரணங்கள் யாவை;

(iv) அவர்களின் பதிவு/அடையாள அட்டைகளை புதுப்பித்தல்/கிளினிக் அனுமதிக்கு ரூபா 5,000/- வரையான தொகையை செலுத்த வேண்டும் என்பதுடன், இது அவர்களுக்கு செலவினச் சுமையாகும் என்பதை ஏற்றுக் கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

977/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களத்தில் 3081 பதிவு செய்யப்பட்ட பதிலீட்டாளர்கள் கடமையாற்றுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவர்களது சேவைக் காலம் யாதென்பதையும்;

(iii) தபால் திணைக்களத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு அவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) தபால் திணைக்களத்தில் நிலவும் பதிவு செய்யப்பட்ட பதிலீட்டாளர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஆகஸ்ட் 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

846/2025

கௌரவ டபிள்யூ.எச்.எம். தர்மசேன,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள அரச பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஒவ்வொரு கம்பனிக்கமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்தக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகள் உப குத்தகைக்கு விடப்பட்டிருப்பின், அந்தக் காணிகளின் அளவு, உப குத்தகையை பெற்றுள்ள கம்பனிகள்/நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உப குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளுக்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பெறப்பட்டுள்ள குத்தகை வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி குத்தகை வருவாயை உரிய முறையில் வசூலித்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1024/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பிளாஸ்டிக் உற்பத்தி கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இலங்கையில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் அளவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) பிளாஸ்டிக்கினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சிறு பிள்ளைகளுக்கான உணவுப் பொதிகளின் தரம் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1068/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி உரிமையாளர்களால் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணி உரிமங்கள், அளிப்புப் பத்திரங்கள் மற்றும் உறுதிகளுக்காக 'உருமய' வேலைத் திட்டத்தின கீழ் அறுதியுறுதிகளை வழங்குவதற்கு இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததை ஏற்றுகொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு காணி உரிமங்கள், அளிப்புப் பத்திரங்கள் மற்றும் உறுதிகளை ஒப்படைத்துள்ள நபர்களின் காணி உரித்துகளை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணி உரிமங்கள், அளிப்புப் பத்திரங்கள் மற்றும் உறுதிகளுக்கான அறுதியுறுதிகளை வழங்கும் நடவடிக்கைளை நிறைவுசெய்வதற்கு திட்டவட்டமான ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

(iv) அறுதியுறுதிகளைப் பெறுவதற்காக அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணி உரிமங்கள், அளிப்புப் பத்திரங்கள் மற்றும் உறுதிகள் பற்றிய தற்போதைய நிலைமைகள் குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் தகவல்களைப் பெறக்கூடிய வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1070/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் தற்பொழுது பயன்படுத்தப்படாதுள்ள மாத்தறை, நாவிமன சார்க் கலாசார நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்நிதிச் செலவினைச் செய்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படிக் கட்டிடத் தொகுதியின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக வருடாந்தம் செய்யப்படுகின்ற செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படிக் கட்டிடத் தொகுதியை பயன்பாட்டிற்கு உட்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1073/2025

கௌரவ அஜந்த கம்மெத்தெகே,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) நகர அபிவிருத்தி அதிகாரசபை மாத்தறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு அபிவிருத்தி கருத்திட்டத்தினதும் பெயர் மற்றும் இடம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களில் மாத்தறை நகர எல்லைக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதி, கருத்திட்டத்தின் தன்மை, கருத்திட்டத்தின் நோக்கம், கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை, கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மாத்தறை 'கங்கபட உத்யானய' மற்றும் 'துறுனு உயன' ஆகிய கருத்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆட்கள் தொடர்பான விபரங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1076/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் சுகாதார உதவிப் பணியாளர்கள் சேவையின் (தரம் - III) நிரந்தர நியமனத்திற்காக நடத்தப்பட்ட முறையான நேர்முகத்தேர்வின் பின்னர் ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 454 சுகாதார உதவிப் பணியாளர்கள் இதுவரை ஆட்சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ii) நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமையாலேயே மேற்படி ஆட்சேர்ப்பு தாமதமாகியுள்ளது என்பதையும்;

(iii) வட மாகாணத்தில் சுகாதாரச் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்குறிப்பிட்ட பதவியில் நிலவும் 643 வெற்றிடங்கள் தடையாக உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களுக்கு மதிப்பளிக்காமல் அச்சுகாதார உதவிப் பணியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தடையாக உள்ள நிருவாக மற்றும் சட்டரீதியான தடைகள் யாவை என்பதையும்;

(ii) அவர்களை உடனடியாக ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1084/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வவுனியாவின், தச்சங்குளம் விமானநிலையத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக அதனைச் சுற்றியுள்ள தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டதுடன் நீண்ட காலமாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட வீதிகளை தொடர்ந்தும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) குறிப்பாக, தச்சங்குளம் – மூன்றுமுறிப்பு பிரதான வீதி நீண்டகாலமாக பொது மக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதனால், தச்சங்குளம் கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் தமது தேவைகளுக்காக இரண்டு கிலோ மீற்றர் பயணித்து கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு செல்வதற்கு பதிலாக சுற்றுப்பாதையில் 12 கிலோ மீற்றர் வரையில் செல்ல வேண்டியுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட தச்சங்குளம் – மூன்றுமுறிப்பு பிரதான வீதியை பொது மக்களின் பாவனைக்காக திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1092/2025

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவில் 'குடாஓயா' ஆறு தொடக்கம் 'தெபரஆர' குளம் வரையில் வெட்டப்பட்ட, கால்வாய் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக நிதி வழங்கிய மூலாதாரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி திட்டத்தில் முறையான பெறுகை செயன்முறைகள் பின்பற்றப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய தகவல்களை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரர் யாரென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி மற்றும் மேற்பார்வை வழங்கியுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்தக் கால்வாயை வெட்டும்போது அப்புறப்படுத்தப்பட்ட கருங்கற்கள் மற்றும் மண் அகற்றப்பட்ட முறை யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் தற்போது அடையப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1103/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய சனாதிபதியின் சமீபத்திய ஜெர்மனி விஜயத்தால் கிடைக்கப் பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி விஜயத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி விஜயத்தின்போது சனாதிபதி அவர்கள் சந்தித்த அரச தலைவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1117/2025

கௌரவ (கலாநிதி) (செல்வி)கௌஷல்யா ஆரியரத்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படை மற்றும் இலங்கை பொலிஸ் சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள ஏராளமானவர்கள் தனியார் பாதுகாப்பு சேவைகளில் கடமையாற்றுவதை அறிவாரா;

(ii) அவர்களுக்கு நியாயமான சம்பளம், போதுமான வசதிகள், உரிய பயிற்சி மற்றும் உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெறுகின்றதா;

(iii) தனியார் பாதுகாப்பு சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான செயன்முறையொன்று காணப்படுகின்றதா;

(iv) இன்றேல், ஒழுங்குமுறைப்படுத்தல் செயன்முறையொன்றை தயார் செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2025 செப்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 60/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தல்,— கடந்த காலத்தில் பாடசாலை ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசனைக்கான பிரிவொன்றை நிறுவுதல், மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான அலகு ஒன்றை நிறுவுதல், அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உளவள ஆலோசனைக்கான டிப்ளோமா கற்கைநெறிகள், பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் போதித்தல், மன அழுத்தத்திற்குத் தீர்வுகாண ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையிலும் உளவியல் மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவற்றால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளதால் அரசியல் அதிகாரத்தார், அரசாங்க அலுவலர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக இடையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில் நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா,— இலங்கையின் மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரித்தல்,— வெளிநாட்டு நீதிமன்றக் கட்டமைப்புக்களிலுள்ள பெருமளவான மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதுடன் ஒப்பிடும்போது, இலங்கை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதானது அதை விடக் குறைவாகக் காணப்படுவதால், இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 67ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65ஆகவும், மேல்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 63ஆகவும், ஓய்வு பெறும் வயதெல்லைகளை அதிகரிப்பதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.